விடியல்

The Dawn

இதழ்-118, பிப்ரவரி - 2019


**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**

தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**

தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வீ.சங்கிரான்


# உலகத் தாய்மொழி தினம்

உலக மக்களின் அடையாளம் மொழியே. இஃது மக்கள் ஒருவருக்கு ஒருவர் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் கருவியாக விளங்கிறது. மனிதன் தொடக்க காலத்தில் சைகை மொழியிலிருந்து ஒலியும், ஒலியன்களும் கண்டறிந்தான். அது ஒரு குறிப்பிட்ட பொருள்களென அடையாளம் காணப்பட்டது. இந்நிலை முதிர்வில் மொழிகள் வளர்ச்சி அடைந்தன.

மொழிகளின் பெருமைகளை உணர்ந்த யுனெஸ்கோ அமைப்பானது உலக மொழிகளைக் காக்கவும், அவற்றின் சிறப்புகளைப் பறைசாற்றவும் தாய்மொழி தினத்தை உருவாக்கியது. உலகத் தாய்மொழி தினம் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் உலகெங்கும் பின்பற்றப்பட்டு

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)


வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power


All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publis

வருகிறது. உலகில் பேசப்படும் மொழிகள் ஆறாயிரத்திற்கும் (6,000) மேற்பட்டன. யுனெஸ்கோவின் ஆய்வு ஒன்று உலகில் 43% மொழிகள் தற்போது அழியும் நிலையில் உள்ளதெனக் கூறுகிறது. இவற்றில் இந்திய மொழிகளுள் 10% மொழிகள் அழிவை நோக்கிச் செல்கிறது என்பது வருந்தத்தக்கது.

இந்தியாவில் மக்களின் மொழி ஆய்வானது ( People's Linguistic Survey of India ) 1961 - 2011 கால இடைவெளியில் 220 மொழிகள் அழிந்துள்ளன எனக் கூறுகிறது. இந்தியாவில் சரியான மொழி சார்ந்த வாழ்வாதாரம், அங்கீகாரம் இன்மையே 220 மொழிகள் அழிந்ததற்கான முதன்மைக் காரணமாகும். 40% மக்கள் தன் தாய்மொழி வழி கல்வி கற்பதில்லை எனும் ஆய்வு முடிவு மக்களின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

வேலைவாய்ப்பு, கவுரவம் போன்ற பல காரணங்களால் தாய்மொழி வழிக் கல்வி புறக்கணிக்கப்படுகிறது. தாய்மொழியைப் புறக்கணிக்கும் ஒருவர் வேறு எந்த மொழிகயிலும் புலமை பெறவோ, ஆளுமை பெறவோ இயலாது. இந்நிலை இன்று வெளிநாட்டில் வாழும் மக்கள் பலருக்கும் பொருந்தும். புலம்பெயர் நாட்டு மொழியில் புலமை பெற வேண்டுமாயின் தாய்மொழிப் புலமை அவசியம். அப்போதுதான் மொழியை உள்வாங்கும் திறன் அதிகரிக்கும்.

மேற்கூறிய நிலை நம் தாய்மொழியான தமிழுக்கு முற்றிலும் பொருந்தும். உலகின் மிகத் தொன்மையான ஆறு மொழிகளுள் தமிழும் ஒன்று. தமிழ் மொழி தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறுவது அரிதானது. தொல்பழங் காலத்திலேயே தமிழ் மொழியின் எழுத்து, சொல் ஆகியவற்றிற்கும் பொருளான வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்த பெருமை பொருந்தியது. இப்பெருமை

மொழிகளுள் தமிழுக்கு மட்டுமே உள்ளது. இத்தகைய சிறப்புகளைக் கொண்ட தமிழ் மொழியின் இன்றைய நிலை வளர்ச்சி, வீழ்ச்சி என இரு எதிர் முனை நோக்கியும் பயணிக்கின்றன எனும் உண்மை நம்மைச் சுடுகிறது. தமிழ் மொழி குறித்தும், இலக்கண இலக்கியங்கள் குறித்தும் மேடைகளில் முழங்குவோர் தம் வாரிசுகளை தாய்மொழியான தமிழ் மொழியில் பயிற்றுவிக்காது பிறமொழி வழி கற்பிப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழ் மொழியில் கலைச்சொற்கள், அகர முதலிகள் பல புதியதாக தோற்றுவிக்கப்பட்டு மொழிவளர்ச்சியில் மேன்மை அடைந்தள்ளதை மறுக்க இயலாது. அதேசமயம் பேச்சு மொழியில் 50% சொற்களை, வழக்குகளை நாம் இழந்து வருகிறோம் எனும் நிதர்சனம் நம் நெற்றிப் பொட்டுகளில் அறைவதை யாரும் கவனத்தில் கொள்வதில்லை. உலகின் தொன்மையான மொழிகளில் தமிழ்மொழி மட்டும் இன்றுவரை உயிர்ப்புடன் வாழக் காரணம் மக்களின் பேச்சில், வழக்கில், வாழ்வில் இரண்டறக் கலந்த தன்மையே ஆகும். தற்போது இந்நிலை மாறி வருவதால் தமிழ் மொழி அழிவின் வாசலை நோக்கிய பயணத்தைத் தொடங்கியுள்ளது. மொழியையும், மொழியின் மேன்மையையும் மீட்டெடுப்பது அவசியம். இச்செயலில் இன்றைய தலைமுறையினர் ஈடுபடுவது அவசியமான கடமை. நம் மொழி மீட்பு பணியில் பாடுபட்டால் தான் மொழியும், மொழி சார்ந்த மக்களும் மேன்மையடைவர் என்பது திண்ணம்.

**"வீழ்வது நாமாயினும்**
**வாழ்வது தமிழாகட்டும்"**

**- இணையாசிரியர்**



# உலகத் தாய்மொழி தினம்


கவிதைகள்........................5 – 16

உலகத் தாய்மொழி தினம்......16 –18

உ.வே.சாமிநாத ஐயர் ...........18 -21

பொது அறிவு வினா- விடை......22 -24

விடுகதை............................24 -26

கவிதைகள்........................26 -32

# கவிதைகள்

## தமிழே என் காதலி

திங்களோடு பிறந்தவளோ...!
திருமேனி சிலையழகோ...!
செங்கமலம் இதழெனவே
செம்மையுற என்ன அழகோ...!
பொங்கி வரும் கடலினிடை
முத்தாகப் பிறந்தவளோ...!
பொதிகை மலைச்சாரலிடை
பூவாக மலர்ந்தவளோ...!
சங்க நகை மிடறுடையாள்
சங்கீத மொழியுடையாள்
பங்கயனின் படைப்பினிலே
பாவையிவள் முழுவுருவாள்

சிந்தும் நகை அத்தனையும்
சிந்தனையினுள் கவியாகும்
முந்தி வரும் மொழியாவும்
சந்தமாக இசையாகும்
அந்தி வரும் மேகமென
இவள் குழலும் விளையாடும்
அழகியலின் அத்துனையும்
அவளோடு உருவாகும்

சந்திக்கும் நொடியாவும்
சஞ்சீவினி மருந்தாகும்
சிந்திக்கும் நாழிகைகள்
சிறை செய்து மறைந்தோடும்
சிமிட்டும் விழிப் பார்வையிலே
சிலையாக நமைச் செய்வாள்
செவ்விதழின் மோதலிலே
தவறாது உயிர் கொய்வாள்
தொடுவிரலால் புதுவுணர்வைத்
தூயவளும் தந்திடுவாள்
தொட்டணைக்க வந்தாலோ,
நாணத்தினால் சென்றிடுவாள்
மதுர மொழியால்
எனைவென்ற
மங்கையவள் யாரென்றால்
உலக மொழி அத்துணைக்கும்
தலைமகளாம்...!
தமிழ் இவளாம்...!

மு.தனுஷ்கண்ணன்
இளம் அறிவியல் வேதியியல் முதலாமாண்டு

## உறவுகள்

அம்மாவின் உறவின்றி
அண்டத்தில் பிறக்க இயலாது
அப்பாவின் உறவின்றி
அகிலத்தை அளக்க இயலாது

அண்ணன் உறவின்றி
அரவணைக்க யார் உண்டு?
அக்கா உறவிற்கு
இணையாக யாரும் இல்லை
தங்கை உறவின்றி
தத்தலிப்போர் பலர் உண்டு
பாட்டியின் உறவிற்கு
பக்குவம் பல உண்டு
தாத்தா உறவை
தக்கவைக்க யாரும் இல்லை
மாமா உறவிற்கு
ஏங்காதவர் யாரும் இல்லை
அத்தை உறவிற்கு
அதிக பாசம் உண்டு
மனைவி உறவுக்கு
மகத்தான உண்மை உண்டு
நட்பு என்ற உறவின்றி
மனிதன் மனம் மகிழுமோ!

ப. கவியரசன்,
இளம் அறிவியல், கணிதவியல் இராண்டாமாண்டு. “ஆ”பிரிவு

## எங்கே போகிறோம்

எங்கே போகிறோம்
நம் வாழ்க்கை தூரம் தூரம்......
இயந்திர வாழ்க்கையில்
இன்பம் துளைக்கிறோம்.......

சிரிப்பை மறந்து
சிந்தனை தொலைக்கிறோம்
வாழ்வை இழக்கின்றோம்.....
உணவை வெறுத்து
ஊமையாய் இருந்து
ஊனமாய்ப் போகிறோம்........
வயலை விற்று
வானத்தைப் பார்த்து
வருமானத்திற்கோ ஏங்குகிறோம்.....
விதவிதமான உடையிலும் நகையிலும்
ஆனந்தத்தைத் தேடுகிறோம்....
இயந்திர உலகில்
இனிமையாய் வாழ்வது போல
இருப்பதை எல்லாம் இழக்கிறோம்
அழிவை நோக்கி
நம் பயணம் போகுதே... போகுதே....
எங்கே நாம் போகிறோம?

ப. கவியரசன்.

இளம் அறிவியல், கணிதவியல் இராண்டாமாண்டு. "ஆ"பிரிவு

## இரண்டாம் தாய்

என் வகுப்பில் ஒருவராக வந்து
ஒவ்வொரு மாணவருடனும் பழகி
ஒவ்வொருவருக்காகவும் யோசித்து
உண்மைக் கருத்தைக் கூறி

பொய்மை குணத்தை நீக்கி
சிறிது நேரம் எங்களுடன் பேசி
வாழ்வில் ஒளி விளக்காய் விளங்க
உங்கள் வாழ்நாள் முழுவதையும்
எங்களுக்கு அளித்து
அழியாத கல்வியினை
கொடுத்த நீங்கள்
எங்களுக்கு இரண்டாம் தாய்...

என் வாழ்வில் வந்த
மற்றொரு தாய் நீ
என் வாழ்வுக்கு வழிகாட்டிய
மற்றொரு தந்தை நீ
நான் வாழ்வில் சாதிக்க
தூண்டுகோளாய்
இருந்த நண்பனும் நீயே!
உன் பாசத்திற்கு ஈடாய் நான்
எதைத் தருவேன் ஆசிரியரே!....

ஆ.தீபிகா
இளம்அறிவியல் உயிர்த்தொழில் நுட்பவியல் முதலாமாண்டு ‘அ’ பிரிவு

## கருவறையின் சிற்பி

அன்பின் அரணாகிய நீ
அழகிய நிலவாகிய நீ
அறிவெனும் ஒளி பொருந்திய நீ
சிற்பமாக என்னை செதுக்கிய சிற்பியே......

சிகரத்தின் உச்சிக்கு
என்னை கொண்டு
செல்லத் துடிக்கும்
உயிர் நீயே......
என் வாழ்வெனும் கவிதையை
இலக்கணப் பிழையின்றி
அழகாய் மாற்றியவளும் நீதான்
எனக்கு அன்பைக் காட்டியவளும் நீதான்
அதற்கு அர்த்தம்
சூட்டியவளும் நீதான்
உன் உதிரம் கொடுத்து என்உயிர்
வளர்த்துக் கொண்டிருக்கும்
என் உயிரே
என் உயிரே உன்உயிர் என
நினைப்பாய் நீயே.......
என் புன்னகையில்
மனம் மகிழ்வாய் நீ
தன் குணம் அனைத்தும் அறிவாய் நீயே.....
என்றும் உன்னை மறவேன் தாயே......
எப்பொழுதும் உன்னுடன் இருப்பேன் நானே.....
என் உயிர்
என் அம்மா.........

பு.கர்ணன்
கணிதவியல் இரண்டாமாண்டு இ பிரிவு

# கல்பனா சாவ்லா

நிலவைப் பார்த்து
சோறுண்ட காலத்திலே
நிலாவில் சோறுண்ண
கனா கண்டவள் நீ!
வானில் நட்சத்திரங்களை
எண்ண மட்டும் அல்ல
அதனை எட்டவும்
நினைத்தவள் நீ!

விண் வெளியில்
காலடி வைப்பதே
கனவாய் இருந்த காலத்தில்
அமெரிக்கா சென்று
விண் வெளியில்
காலடி வைத்தவள் நீ!

ஆணுக்குப் பெண்
நிகரல்ல என்று
வாய்ச் சவடால் பேசியவர்களை
வாயார வாழ்த்த வைத்தவள் நீ!

இந்தியனாக பிறந்ததே
பெருமையென்று களிக்கும்
எங்கள் மனதை
இந்தியாவிற்கு நீ
கிடைத்தது பெருமையென்று
களிக்க வைத்தாய்!

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும்
இலட்சியம் எனும்
விண்ணை எட்டும் ஏவுகணைகள்
என்று உணர வைத்தாய்!

மண்ணிலிருந்து
விண்ணுக்குச் சென்று
எங்களை தலை நிமிர
வைத்து விட்டு
இன்று
எங்கள் கண்ணைவிட்டு
விண்ணுக்குச் சென்றுவிட்டாய்!

ஆனந்தக் கண்ணீரில்
எங்களை நனைய வைத்தாய்
அன்று
துயரக் கண்ணீரில்
கதற வைக்கின்றாய்
இன்று!
இம்மண்ணில் தோன்றி
விண்ணில் காலடி வைத்தவளே
உன் காலடிகளை எங்கள்
கண்ணீரால் நனைத்து
தலை வணங்குகிறோம்!

கா.அபிநயா
இளம் அறிவியல் முதலாம் ஆண்டு கணிதம் ‘அ’ பிரிவு

# முதலும் முடிவும் நீயே அம்மா!

என்
விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சையை இரசித்திட
வெற்றியில் களித்திட
தோல்வியில் துவண்டிட
முத்தத்தில் மகிழ்ந்திட
சித்தத்தை செதுக்கிட
உதிரத்தைத் துடைத்திட
உயிருடன் கலந்திட
இன்பத்தைப் பெருக்கிட
இன்னலைக் களைந்திட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை நீ...
அம்மா!

உனக்கு நான் பட்ட கடனதை
எத்தனை பிறவி எடுத்தும்
தீர்க்க முடியாத நிலையில்
ஒன்று மட்டும்
உறுதி செய்கிறேன்...
என்னை
உன் உயிர்த் துளியாகக் கருதி

எனக்கு நீ ஆற்றியவைகளை
மறந்திடும் நாளொன்றில்
இந்த மகனுக்கு
இவ்வுலகம் வைத்திடும்
பெயர் பிணம்!!!

ஆ.யோகேஸ்வரன்
இளம் அறிவியல் வேதியியல் முதலாமாண்டு.

## கல்லூரி காலம்

பள்ளிப் பருவம் முடித்து
துள்ளித் திரிந்த நாங்கள்
ஜூன் மாதப் பூக்களாய்
கல்லூரி என்ற
நந்தவனத்தில் நுழைந்தோம்!
எங்களின் மூன்று ஆண்டுகள்
ஆயிரம் கனவுகளுடன்
மூடாத கதவுகளாய் திறந்திருந்தன!

எங்களின் கால்சுவடுகளை
ஏற்க மறுக்காத படிகளும்,
நண்பனின் முகம் பார்க்க
காத்திருக்கும் தூண்களும்
HOD-யின் அதிர்வு கேட்டு
அசையாத மரங்களும்,
ஆசானும் அன்னையுமாய்
தெரிந்த வகுப்பறையும்,
கல்லூரின் நூலகத்தையே

எட்டிப் பார்க்காத நாட்களும்,
எட்டிப் பார்த்து எழுதியும்
தேர்வில் தேறாத மதிப்பெண்களும்,
தேர்வின் முடிவில்
மனம் தளராத நெஞ்சமும்,
நண்பனின் சட்டையை
மாற்றித் திரிந்த நாட்களும்,
அழகு என்று பொய் சொன்னாலும்
அழகாய் ரசிக்கத் தோன்றிய நாட்களும்...

உணவினை ஊட்டி
அன்பினைப் பரிமாறிய
கல்லூரி கேண்டீனும்
படிப்பில் நடிப்பின்றி
நடிப்பையே படிப்பாக்கிய
எங்களின் நாடக மேடையும்,
கல்லூரி சுற்றுலாவில்
சுழன்று வந்த மேகத்தை
சுட்டு விரலால்
தொட்டு வந்த நாட்களும்,
சண்டைகள் மட்டுமின்றி
எங்களின் சந்தோஷங்களையும்
கதை கதையாய்
சொல்லும் கல்லூரி மரங்களும்,
வெள்ளை காகிதமாய்
இருந்த எங்களை
வண்ண கோலமாய்,

வானவில்லின்
ஓர் அங்கமாய் வரைந்தது
இக்கல்லூரி வாசல் தான்...!

S.சவிதா

இளம்அறிவியல் உயிர்த்தொழில் நுட்பவியல் இரண்டாமாண்டு 'அ' பிரிவு

## *உலகத் தாய்மொழி தினம்*

பன்னாட்டுத் தாய்மொழி நாள் பிப்ரவரி 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1952 இல் இந்த நாளன்று அன்றைய கிழக்கு பாகிஸ்தான் தலைநகர் தாக்காவில் வங்காள மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்கக்கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது உயிர் நீத்த நான்கு மாணவர்களின் நினைவாக இந்நாள் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூறப்படும் சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

வங்காள தேச அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்துலக அமைப்புகளது ஆதரவுகள் காரணமாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெசுக்கோ) அமைப்பின் 1999 பிப்ரவரி 21 பொது மாநாட்டின் 30 ஆவது அமர்வில் இந்நாளை அனைத்துலக தாய் மொழி நாளாக அறிவித்தது. பல்வேறு சமூகங்களின் மொழி பண்பாட்டுத் தனித்தன்மைகளைப் பேணுவதுடன் அவற்றுக்கிடையிலான ஒற்றுமையையும் உருவாக்கும் எண்ணத்தோடு இந்த நாளை யுனெசுக்கோ அறிவித்தது. 2000 ஆம் ஆண்டு முதல் இந்த நாளானது உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. 2013 ஆம் ஆண்டின் அனைத்துலகத்

தாய்மொழி நாளை ஒட்டி யுனெசுக்கோ பாரிசில் "தாய் மொழிகளும் நூல்களும் எண்ணிய நூல்களும் பாட நூல்களும்" என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

செ.திவாகர்

இளம் அறிவியல் வேதியியல் முதலாமாண்டு.

## *உலகத் தாய்மொழி தினம்*

ஒவ்வொரு மொழிக்கும் அந்த மொழிக்கு உரிய சிறப்புத் தன்மைகள் உண்டு. ஒவ்வொரு இனக் குழுவிற்கும் அடையாளமாக இருப்பது அவர்களின் தாய்மொழி. தாய் மொழிகளின் சிறப்பையும், அவசியத்தையும் எடுத்துணர்த்த, ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 21-ம் நாள் உலகத் தாய்மொழி தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

தாய்மொழிக் கல்வியின் அவசியம் குறித்து, கணினி வல்லுநர் மணி மணிவண்ணன் உடன் பிபிசி தமிழ் பேசியது. அவர் பகிர்ந்து கொண்டவற்றை கீழே கொடுத்துள்ளோம். தாய்மொழியினைக் கற்றுக் கொள்வது இயல்பான, எளிமையான செயல். தாய் மொழியினைக் கற்றுக் கொள்ளாமல் ஓர் அயல் மொழியினையோ, குடியேற்ற மொழிகளையோ கற்றுக் கொள்ள முயற்சிகள் தேவை. ஒவ்வொரு மொழிக்கும் சில தனித்தன்மைகள் உண்டு. அது அனைத்தையும் பிற மொழிகளில் மொழி பெயர்த்துவிட முடியாது. உதாரணமாக, தமிழில் 'மனம் குளிர வரவேற்கிறோம்' என்ற சொற்றொடரை ஆங்கிலத்தில் 'Warm Welcome" என்று மொழி பெயர்க்கும்போது அதன் பொருளே மாறுபட்டு விடும். எழுத்தறிவிற்கு தாய் மொழிக் கல்வி மிக

அவசியம். ஆப்பிரிக்க நாடான கானாவில் நடைபெற்ற ஓர் ஆய்வில், பிறமொழிக் கல்வியினை கற்றவர்களை விட தாய்மொழிக் கல்வியினைக் கற்றவர்களுக்கு 110 சதவீதம் எழுத்தறிவுத் திறன் அதிகமாக இருக்கின்றது என்பது உறுதியாகி இருக்கின்றது என்கிறார் மணி மணிவண்ணன்.

அமெரிக்காவில் பர்க்கெலி கலிபோர்னியா பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக இருந்த ஜார்ஜ் ஹார்ட், இந்தியாவில் இருந்து ஆங்கில வழிக்கல்வி அல்லது பிறமொழி கல்வியினை மட்டும் கற்றுக்கொண்டு அமெரிக்கா வருகிறவர்களால் ஆங்கிலத்திலும், ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவர்கள் போல புலமையுடன் இருக்க முடிவதில்லை என்கிறார்.

கா.அபிநயா

முதலாம் ஆண்டு கணிதம் 'அ' பிரிவு

## *உ.வே. சாமிநாதையர்*

**வாழ்க்கை**

சாமிநாதன் பிப்ரவரி 19, 1855 - ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டம், பாபநாசத்தில் உள்ள "**உத்தமதானபுரம்**" என்னும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் மற்றும் சரசுவதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். இவரது தந்தை ஓர் இசைக் கலைஞர். உ.வே.சா தனது தொடக்கத் தமிழ்க் கல்வியையும், இசைக் கலையையும், சொந்த ஊரில் உள்ள ஆசிரியர்களிடத்தே கற்றார். பின்னர் தன் 17-ஆம் வயதில் தஞ்சாவூர் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ்பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டு

காலம் பயின்று தமிழறிஞர் ஆனார். தொடக்கத்தில் கும்பகோணத்திலிருந்த கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியில் இருந்த சாமிநாதன், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்தார்.

**உ.வே.சா வாழ்க்கையின் சிறப்பு**

உ.வே.சா என்று அழைக்கப்படும் உ.வே சாமிநாத ஐயர், உழைத்திராவிட்டால் தமிழுலகிற்கு சிலப்பதிகாரத்தை பற்றித் தெரியாமலே, போயிருக்க வாய்ப்பிருந்திருக்கும். அகநானூற்றிற்கும் புறநானூற்றிற்கும் வேறுபாடு தெரிந்திருக்காது. மணிமேகலை மண்ணோடு மறைந்திருக்க வாய்ப்பிருந்திருக்கும். இப்படி நூற்றுக்கணக்கான நூல்களை அழிவிலிருந்து காப்பாற்றி புதுப்பித்துத் தந்தவர் என்னும் பெருமை உடையவர் உ.வே.சா. மேலும் தன்னுடைய சொத்துக்களையும் விற்று பல தமிழ் இலக்கிய நூல்களை பதிப்பித்தார். இத்தகைய அரிய சேவைக்காக அவரின் சீரிய முயற்சிகள் தாராளம், பட்ட சிரமங்களோ ஏராளம், இருந்தும் மனம் தளராது இச்சேவையில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார்.

**ஏட்டுச்சுவடி மீட்பு**

உ.வே.சா கும்பகோணத்தில் பணியில் இருந்த காலத்திலே சேலம் இராமசாமி முதலியார் என்பவரைச் சந்தித்து நட்பு கொண்டார். ஒருநாள் வழக்கம்போல் இவர்கள் உரையாடிக் கொண்டிருக்கையில் சீவக சிந்தாமணியைப் பற்றித் தெரியுமா? என முதலியார் வினவினார். தனது ஆசிரியரிடம் சிற்றிலக்கியங்கள் பெரும்பாலானவற்றை மட்டுமே கற்றிருந்த உ.வே.சா சிற்றிலக்கியங்களைத் தவிர வேறு பல தமிழ் இலக்கியங்களும் இருப்பதை அன்று அறிந்தார். இராமசாமி முதலியார் உ.வே.சா.வுக்கு

அளித்த சமண சமய நூலான சீவக சிந்தாமணியின் ஓலைச்சுவடிப் பகுதி அக்கால கட்டத்தில் சமயக் காழ்ப்பினால் புறக்கணிக்கப்பட்டிருந்த சமண இலக்கியங்களைப் பற்றி அறியும் ஆவலையும், அதனை அழியவிடாது அச்சேற்ற வேண்டும் எனும் எண்ணத்தையும் உ.வே.சாவினுள் தூண்டியது. சமண இலக்கியங்களோடு பல ஓலைச் சுவடிகளையும் உ.வே.சா தேடித்தேடி சேகரித்தார். சேகரித்தது மட்டுமின்றி அவற்றைச் சேமித்து, பகுத்து, பாட வேறுபாடு கண்டு, தொகுத்து, பிழை திருத்தி அச்சிலேற்றும் பணியையும் துவங்கினார். பின்னாளில் அவற்றுக்கு உரையெழுதும் அரும்பணியையும் ஆற்றினார். இப்பணியானது அவர் தனது 84 ஆம் அகவையில் இயற்கையெய்தும் வரை இடையாறாது தொடர்ந்தது.

**எழுதிய நூல்கள்**

சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பல வகைப்பட்ட 90 - க்கு மேற்பட்ட ஓலைச் சுவடிகளுக்கு நூல் வடிவம் தந்து அவற்றை அழிவில் இருந்து காத்தது மட்டுமின்றி அடுத்த தலை முறையினர் அறியத் தந்தார்.

சங்க காலத் தமிழும் பிற்காலத் தமிழும், புதியதும் பழையதும், நல்லுரைக் கோவை போன்ற பல உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

**பேச்சுத்திறன்**

உ.வே.சா. கருத்தாழத்தோடு நகைச்சுவை இழையோடப் பேசும் திறமை உடையவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில்

உ.வே.சா ஆற்றிய சொற்பொழிவே “சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்” எனும் நூலாக வெளியிடப்பட்டது.

**பட்டங்கள்**

உ.வே.சா தமிழுக்கும் இலக்கியத்துக்கும் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டி மார்ச் 21, 1932 அன்று சென்னைப் பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் அளித்தது. இது தவிர மகாமகோபாத்தியாய மற்றும் தக்ஷிண கலாநிதி என்னும் பட்டமும் பெற்றுள்ளார். இந்திய அரசு பிப்ரவரி 18, 2006-ம் ஆண்டில் இவரது நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது.

**நினைவு இல்லம்**

உத்தமதானபுரத்தில் உ.வே.சா வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவு இல்லமாக்கப்பட்டுள்ளது. 1942-ல் இவர் பெயரால் சென்னை வசந்த நகரில் (பெசன்ட் நகரில்) டாக்டர் உ.வே.சா நூல் நிலையம் அமைக்கப்பட்டு இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**தன் வரலாறு**

உ.வே.சாமிநாதையர் தனது வரலாற்றை ‘**என் சரித்திரம்**’ எனும் தலைப்பில் ஆனந்த விகடன் வார இதழில் 1940 முதல் 1942 வரை தொடராக எழுதி வந்தார். இது 1950 ஆம் ஆண்டில் தனிப் புத்தக வடிவம் பெற்றது. இது தவிர இவரது வாழ்க்கை வரலாறு ‘தமிழ் தாத்தா’ எனும் தலைப்பில் தொலைக்காட்சித் தொடராகவும் எடுக்கப்பட்டு சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தாரால் (தூர்தர்சன்) ஒளிபரப்பப்பட்டது.

பூ.பூமிகா

இளம் அறிவியல் முதலாம் ஆண்டு கணிதவியல் ‘அ’ பிரிவு

## பொது அறிவு

1) திருக்குறளில் பயன்படுத்தாத வார்த்தை?

விடை : ஒன்பது.

2) நாலடியார் என்னும் நூலை தொகுத்தவர்?

விடை : பதுமனார்

3) "ஆற்றுணா வேண்டுவது இல்" என்னும் பழமொழி உணர்த்தும் பொருள்?

விடை : கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டாம்.

4) "ஞானத்தால் வீடாகும் நாட்டு" என பெயர் பெற்ற நூல்?

விடை : சிறுபஞ்சமூலம்

5) கம்பர் என்னும் பெயரைக் குறிக்கும் சொல் எது?

விடை : நரசிங்கம்

6) கம்பராமாயணத்தில் "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்னும் கூற்று யார் யாரிடம் கூறியதாக எழுதப்பட்டது.

விடை : சீதை ராமனிடம்.

7) "முந்தையிருந்து நாட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" என்னும் பாடல்வரி இடம்பெற்ற நூல்?

விடை : நற்றிணை

8) குறட்கருத்துக்களையும், இதிகாசக் கருத்துகளையும் கொண்ட எட்டுத்தொகை நூல் எது?

விடை : கலித்தொகை

10) குறிஞ்சிப்பாட்டை "பெருங்குறிஞ்சி" என்று பாராட்டியவர் யார்?

விடை : நச்சினார்க்கினியர்

11) "எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே" என்று கூறியவர்?

விடை : ஔவையார்

12) வறியவர்க்கு சோறிடும் அன்னதானத்தை குறிப்பிடும் நூல் எது?

விடை : மணிமேகலை

13) உலக காப்பியங்களில் சிலப்பதிகாரத்திற்கு ஒப்பானது எது?

விடை : சேக்ஸ்பியரின் மாக்பெத்து

14) பத்துப்பாட்டில் எந்த நூலின் தொடக்கத்தில் யாழின் வருணனை அமைகிறது?

விடை : பெரும்பாணாற்றுப்படை

15) கம்பனின் மகன் பெயர் என்ன?

விடை : அம்பிகாபதி.

அ.கண்ணன்

இளம் அறிவியல் வேதியியல் முதலாமாண்டு.

## பொது அறிவு

1. இந்தியாவில் எப்போது வருமானவரி பழக்கத்திற்கு வந்தது?

விடை : 23.07.1860

2. ஆகாயவிமானத்தில் பயணம் செய்த முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?

விடை : ரூஸ்வெல்ட்

3. கப்பலின் வேகத்தை கணக்கிடப் பயன்படும் அலகு எது?

விடை : நாட் என்ற அலகு

4. இந்தியாவில் எப்போது விவாகரத்துச் சட்டம் அமுலுக்கு வந்தது?

விடை : 18.05.1995

5. சமாதான வெண்புறாவை வரைந்து கொடுத்தவர் யார்?

விடை : ஓவியர் பிக்கலோ

6. உலோகங்களில் மிகவும் லோசானது எது?

விடை : லித்தியம்

7. ரோம் எண்ணில் “ப” என்று எழுதினால் எதைக் குறிக்கும்?

விடை : 500 ஐ – குறிக்கும்

8. ஆப்கானிஸ்தானத்தில் வழங்கப்படும் மொழி எது?

விடை : புஷ்டு

9. உலகம் முழுவதும் பயன்படக்கூடிய பொது மொழி எது?

விடை : எஸ்பரான்டோ

10. யுனானி மருத்துவ முறையை ஆரம்பித்தவர்கள் யார்?

விடை : அரேபியர்கள்

கோ.தமிழ்ச்செல்வி

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## *விடுகதை*

1. படபடக்கும் பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?

விடை : பட்டாசு

2. கையில்லாமல் நீந்துவான்: கால் இல்லாமல் ஓடுவான்: அவன் யார்?

விடை : படகு

3. கடிபட மாட்டான் பிடிபட மாட்டான் அவன் யார்?

விடை : தண்ணீர்

4. பச்சைப்பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள் அது என்ன?

விடை : வெண்டைக்காய்

5. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான் அவன் யார்?

விடை : வெங்காயம்

6. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி அவள் யார்?

விடை : முட்டை

7. காதைத் திருகினால் பாட்டு பாடுவான் அவன் யார்?

விடை : வானொலிப்பெட்டி

8. உடம்பெல்லாம் பல் கொண்ட ஒருத்திக்கு கடிக்கத் தெரியாது?

விடை : சீப்பு

9. கடலிலே கலந்து,கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?

விடை : உப்பு

10. செய்தி வரும் பின்னே மணியோசை வரும் முன்னே அது என்ன?

விடை : தொலைபேசி

11. நீரிலும் வாழ்வேன் நிலத்திலும் வாழ்வேன் நீண்ட ஆயுள் உடைய எனக்கு இறைவன் கொடுத்த கவசமும் இருக்கும் நான் யார்?

விடை : ஆமை

2. தாய் குப்பையிலே மகள் சந்தையிலே அவை என்ன?

விடை : நெல்

3. பூ பூக்கும் காய் காய்க்கும் ஆனால் பழம் பழுக்காது அது என்ன?

விடை : தேங்காய்

4. கையை வெட்டுவார் கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர் அவர் யார்?

விடை : தையல்காரர்

பெ.அரவிந்த்

முதலாம் ஆண்டு இளங்கலை கணிதம் “அ” பிரிவு

## பொது அறிவு

1. முதுகெலும்பு உடைய பெரிய உயிரினம் எது?

விடை : திமிங்கலம்

2. சிந்து மக்கள் வணங்கிய கடவுள் யார்?

விடை : எருது

3. இறைவனின் பிள்ளை என்று அழைக்கப்பட்டவர் யார்?

விடை : திருஞானசம்பந்தர்

4. பழைய கற்கால மக்களின் முக்கிய தொழில் எது?

விடை : மீன் பிடித்தல்

5. காதல் கிரகம் என்று எந்தக் கோள் கருதப்படுகிறது?

விடை : வீனஷ்

6. தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

விடை : ஹோவே

7. முதன்முதலாகப் பெண்களுக்கு ஓட்டுப்போட உரிமை அளித்த நாடு எது?

விடை : நியூசிலாந்து

8. காவேரி ஆறு உருவாகும் மலையின் பெயர் என்ன?

விடை : குடகுமலை

9. ரோஜாப்பூவில் உள்ள வைட்டமின் எது?

விடை : விட்டமின் சி

10. மிக விரைவில் ஆவியாகும் திரவம் எது?

விடை : ஆல்கஹால்

ஈ.தாரணி

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## மழையின் வனப்பு

மின்னல் என்னை
வட்டமிட மிரண்டேன்
மயங்கி நின்றேன் .....

சின்ன சின்ன மழைத்துளி
என்னை நோக்கி விழ
சிட்டாய் பறந்தேன்
அழகிய நிலவோடு
செல்ல மழை என்னைத் தழுவ
உடல் சிலிர்த்து
உயிர் உருகிப் போனது......

விழித்ததும்
வானமது கவி பொழிய
விண்ணகத்தோடு
மண்ணகம் பந்தம் கொண்டு
விரல் பிடித்து
மேகம் மத்தளம் கொட்ட
வா என்று அழைத்து
அமரச் செய்தது...
வியப்பில் மயில் போல
நான் நிற்க...
வானமே இறங்கி வந்து
கைக்கோர்த்து
பல உயிர்களைக்
காக்க வந்த
அழகிய மழையே.!!!!!

கோ.கர்ணன்
இளம் அறிவியல் கணிதவியல் இரண்டாமாண்டு - இ பிரிவு

## விடுமுறை நாட்கள்

தேர்வின் தொல்லையில் இருந்து விடுத்து
தேவதையும் தாய் தந்தையும்
காணச் சென்றேன்
விடுதியில் இருந்து விடுமுறையில்
தாயின் பாசம்
தந்தையின் வீர மீசையையுடைய திட்டு,
பழையக் கதை அன்பு
அனைத்தும் உணர்ந்த நாட்கள்...
விடுதியில் தனிமையிலே
அண்ணனுடன் ஆட்டம்
தங்கையின் தாலாட்டு
என அனைத்தும் நினைத்து
உணர்ந்தது விடுதியிலே...
ஊரின் உள்ளே நுழைந்த போது
பொங்கிற்று மனம்
உறங்காமல் மலர்ந்த பூக்கள்
காத்துக் கொண்டிருந்தது...
ஊரின் வாயில்
வயலின் புல்வெளி
நெற்கதிர் அனைத்தும்
சிரித்து வரவேற்றது
நெட்டைப் பனைமரமோ ஆடிற்று
காற்றில் அல்ல உற்சாகத்தில்
ஆனந்தமாய் வரவேற்ற தென்னை
வீட்டின் வாயிலில் காத்திருந்தது

காவல் ஜீவன்
எனைக் கண்டதும் என்ன ஆனந்தம்
உள்ளே சென்றேன்
தாயைக் காண
இருந்தாள் உள்ளே
புகைப்படமாய்...
தந்தையைக் காண
சென்றேன் உள்ளே
கன்றுகளோடு இருந்தார் பின் பக்கம்
ஆனந்தம் இல்லாததுப் போல் காட்டினாலும்
வரவேற்றார் கட்டித் தழுவி
அண்ணன் அரிவாளுடன்
விரைந்தான் விறகிற்கு
தங்கை தண்ணீர் தூக்கச் சென்றிருந்தாள்
தாத்தாவின் உலறல்கள் வீட்டினருகே
குடும்பத்தில் ஐவர்
நாங்கள் செய்யும் தொழிலோ
விவசாயம் தான்
விடுமுறை இரண்டு நாட்கள்தான்
காலையில் நண்பர்களுடன் சென்றேன்
ஊரைச் சுற்ற
விடுமுறை முடிந்து
விடுதிக்குத் திரும்பும் நேரம்
விருப்பமில்லா மனம்...
போக வேண்டிய சூழ்நிலை
கிளம்பினேன் விடுதிக்கு

பனை மரம் ஆடவில்லை
வயல் அமைதி காத்தது
ஊரின் எல்லையில் பூத்தப் பூ
தற்போது உறங்கிக் கொண்டு இருக்கின்றது
விடுதியில் வீட்டை எண்ணி
மறுபடியும் விடுமுறையை எண்ணி
மனம் உருகி எதிர்பார்க்கும் நான்

ந.ஸ்ரீதரன்
இளங்கலை ஆங்கிலம் இரண்டாமாண்டு

## தவறவிட்ட அன்பு (நேசங்கள்)

சின்ன வயதில்
இயற்கையின் அன்பு
தங்கக் குயிலின்
பாடும் இசையில்
நனையும் சந்தோசம்
மெல்ல ரசிக்க மறந்தேன்
மழையின் அன்பு....
குழந்தையின் பொன்சிரிப்பு
மறந்தேன் தவறவிட்டு
நடை பழகும்
சின்னக் குழந்தையின்
அழகை மறந்தேன்....
அப்பாவின் நெஞ்சில்
தோல் சாய்ந்து
தூங்கும் அன்பைத் தவறவிட்டேன்...

அம்மாவின் கையில்
சோறு சாப்பிடும்
தவத்தை இழந்தேன்
அண்ணனிடம் சண்டை போடும்
பாசங்கள் கனவாகின...
தங்கையிடம் போட்டியிடும்
நிலை வாழ்க்கையாயின
பள்ளிப் பருவத்தில்
சுற்றித் திரிந்த
காலம் போனது...
நட்பை இழக்கும்
நேரம் வந்தது..
ஒரு ரூபாய்க்கு
வாங்கிய மிட்டாயாக
இருந்தாலும் பங்கு
போட்டுத் தின்ற
அன்பை இன்று இழந்தேன்...
பள்ளியை விட
அதிக அன்பு
கல்லூரியில் கிடைத்தது...
இந்த அன்பும்
பறக்கையில் பாதியில்
இறக்கை இல்லாமல்
பாதியில் விழுந்தது....
எந்த அன்பு உண்மை..
நாம் தேடி காட்டினாலும் நிலைக்காது...

தேடி வந்தாலும் நிலைக்காது
இப்படி ஒவ்வொரு
அன்பையும் இழந்தேன்.....
என்று எனக்கு
கிடைக்கும் தவறவிடாத "**அன்பு**"

இரா.தீபா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## நட்பு

உண்மையா ஒருவரை நேசித்திருந்தால்
உயிர் போகும் வரை
அவர்களை மறக்கவும் முடியாது...
வெறுக்கவும் முடியாது...
ஆயிரம் சொந்தம் நம்மை
தேடி வரும்... ஆனால்,
தேடினாலும் கிடைக்காத ஒரே சொந்தம்
நல்ல நண்பர்கள்!!!

ம.குணசீலன்
இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு